தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 16, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 29, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நோய் இன்னதென்று ஆராய்ந்து, அதன் அடிப்படைக் காரணத்தையும் ஆய்ந்து, முதலில் அதனைத் தீர்க்கும் வழியை ஆய்ந்து, அது உடலுக்கு ஏற்றவாறு அறிந்து செய்திடு சிறந்த மருத்துவம் ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். (குறுக்கீடு)

2. முக்கிய பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் ஏன் இப்படி எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுவது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். கேள்வி நேரத்தில் இப்படி எழுந்து நின்று பேசுவது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரம் முடிந்தவுடன் Zero Hour-ல் பேசினால் பரவாயில்லை. கேள்வி நேரத்தில் எழுந்து பேசுகிறீர்களே? (குறுக்கீடு) கேள்வி நேரம் ஆரம்பிக்கும்போது பேசுகிறீர்களே? (குறுக்கீடு) இல்லை, இவ்வாறு பேசுவது முறையல்ல, உட்காருங்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)